www.Padasalai.Net www.TrbTnpsc.com

VNR8S

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2023

# வகுப்பு - 8

# அறிவியல்

கால அளவு: 2.30 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 12×1=12

1. மின்னோட்டம் என்பது __________ அளவு ஆகும்.
   அ) அடிப்படை ஆ) துணை நிலை இ) வழி ஈ) தொழில் சார்ந்த
2. முதன்மைக் குவியத்திற்கும், ஆடி மையத்திற்கும் இடையே உள்ள தொலைவு __________ என்று அழைக்கப்படுகிறது.
   அ) வளைவு நீளம் ஆ) குவிய தொலைவு இ) முதன்மை அச்சு ஈ) இவற்றில் எதுவுமில்லை
3. வெப்பம் என்பது ஒரு வகையான __________.
   அ) மின்னாற்றல் ஆ) ஈர்ப்பு ஆற்றல் இ) வெப்ப ஆற்றல் ஈ) எதுமில்லை
4. மனித காதுக்குக் கேட்கக்கூடிய அதிர்வெண் வரம்பு
   அ) 2Hz முதல் 2,000Hz வரை ஆ) 20Hz முதல் 2,000Hz வரை
   இ) 20Hz முதல் 20,000Hz வரை ஈ) 200Hz முதல் 20,000Hz வரை
5. கரிக்கோலின் (பென்சிலின்) நடுத் தண்டில் இருப்பது
   அ) கிராஃபைட் ஆ) வைரம் இ) அலுமினியம் ஈ) கந்தகம்
6. காகிதம் எரிதல் ஒரு __________ மாற்றம்.
   அ) இயற்பியல் ஆ) வேதியியல்
   இ) இயற்பியல் மற்றும் வேதியியல் ஈ) நடுநிலையான
7. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் எது நீரை மாசுபடுத்தும்?
   அ) ஈயம் ஆ) படிகாரம் இ) ஆக்சிஜன் ஈ) குளோரின்
8. அமிலமும் காரமும் சேர்ந்து __________ உருவாகிறது.
   அ) உப்பு மற்றும் நீர் ஆ) உப்பு
   இ) நீர் ஈ) இவற்றில் ஏதும் இல்லை
9. __________ ஒரு புரோகேரியோடிக் நுண்ணுயிரியாகும்.
   அ) வைரஸ் ஆ) ஆல்கா இ) பூஞ்சை ஈ) பாக்டீரியா
10. உண்ணத் தகுந்த காளான்
    அ) பாலியோரஸ் ஆ) அகாரிகஸ் இ) பெனிசிலியம் ஈ) அஸ்பார்ஜில்லஸ்
11. __________ மூட்டுகள் அசையாதவை.
    அ) தோள்பட்டை மற்றும் கை ஆ) முழங்கால் மற்றும் மூட்டு
    இ) மேல் தாடை மற்றும் மண்டை ஓடு ஈ) கீழ் தாடை மற்றும் மேல் தாடை
12. ஆடம்ஸ் ஆப்பிள் என்பது இதன் வளர்ச்சியை குறிக்கிறது.
    அ) தொண்டைக் குழி ஆ) தைராய்டு
    இ) குரல்வளை ஈ) பாரா தைராய்டு

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:** 5×1=5

13. நீரியல் உயர்த்தி __________ விதியை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது.
14. மின்னல் தாக்குதலில் இருந்து கட்டடங்களைப் பாதுகாக்கும் சாதனம் __________.
15. உலர் பனி __________ ஆகப் பயன்படுகிறது.
16. மிகப்பெரிய செல் __________ இன் முட்டை ஆகும்.
17. __________ தசை கண்பாவையை அகலமாக்குகிறது.

**III. சரியா அல்லது தவறா எனக் கூறுக. தவறான கூற்றைத் திருத்துக:** 5×1=5

18. ஒரு பொருளானது திட நிலையிலிருந்து வாயு நிலைக்கு மாறும் நிகழ்விற்கு குளிர்வித்தல் என்று பெயர்.
19. நீர் மின்சாரத்தை கடத்தும்.
20. செம்பருத்திப்பூ சாறு ஒரு இயற்கை நிறங்காட்டி ஆகும்.
21. மனிதன் ஒரு வெப்ப இரத்தப் பிராணி.
22. சின்னம்மை ஒரு தொற்று நோயாகும்.

**IV. பொருத்துக:** 5×1=5

| | | |
|---|---|---|
| 23. சர்வ கரைப்பான் | - | நீர் மாறுபடுத்தி |
| 24. கடின நீர் | - | கிருமிகளை கொல்லுதல் |
| 25. கொதித்தல் | - | ஓசோனேற்றம் |
| 26. நுண்ணுயிர் நீக்கம் | - | நீர் |
| 27. கழிவு நீர் | - | வயிற்று உபாதைகள் |

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**V. ஏதேனும் 10 வினாக்களுக்கு மிகச் சுருக்கமாக விடையளி.**
**வினா எண். 30 கண்டிப்பாக எழுதவும்.** **10×2=20**

28. ஒளி எதிரொளிப்பு விதிகளைக் கூறுக.
29. மின் முலாம் பூசுதலுக்கு சில எடுத்துக்காட்டுகள் தருக.
30. ஒரு ஒலி 5Hz அதிர்வெண் மற்றும் $25 ms^{-1}$ வேகத்தைக் கொண்டுள்ளது. ஒலியின் அலைநீளம் என்ன?
31. மின்னோட்டம் என்றால் என்ன?
32. பின்வரும் குறியீடுகளால் குறிக்கப் பெறும் தனிமங்களின் பெயர்களை எழுதுக.
    a) Na b) w c) Ba d) Al
33. மாசுபடுதல் என்றால் என்ன?
34. உலக வெப்பமயமாதல் என்றால் என்ன?
35. பொருத்துக:

| | | |
|---|---|---|
| சைனோஃபைசி | - | பச்சைப் பாசி |
| குளோரோஃபைசி | - | நீலப் பச்சைப் பாசி |
| பெயோஃபைசி | - | சிவப்புப் பாசி |
| ரோடோஃபைசி | - | பழுப்புப் பாசி |

36. அமிலங்கள் மற்றும் காரங்களுக்கு இடையேயான வேற்றுமைகள் யாவை?
37. காற்றுள்ள மற்றும் காற்றில்லா சுவாசத்திற்கு இடையே உள்ள வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக
38. எலும்புக்கூடு என்றால் என்ன?
39. பருவமடைதலின் போது ஏற்படும் மாற்றங்களைப் பட்டியலிடுக.
40. பெனிசிலியத்தைக் கண்டறிந்தவர் யார்?

**VI. ஏதேனும் 8 வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:** **8×4=32**

41. அ) உராய்வை வரையறு. அன்றாட வாழ்வில் உராய்வின் பயன்பாட்டிற்கு இரு உதாரணம் தருக.
    ஆ) பாஸ்கல் விதியைக் கூறுக.
42. தொடர் மற்றும் பக்க இணைப்புச் சுற்றை விளக்குக.
43. அ) தன் வெப்ப ஏற்புத்திறன் - வரையறு.
    ஆ) வெப்பம் கடத்தப்படும் முறைகள் யாவை?
44. ஆக்சிஜனின் இயற்பண்புகள் யாவை?
45. கீழ்காணும் சேர்மங்களின் பெயர்களை எழுதுக.
    a) CO b) $N_2O$ c) $NO_2$ d) $PCl_5$
46. அ) வரையறு : உருகுநிலை
    ஆ) வரையறு : கொதிநிலை
47. பின்வரும் சேர்மங்களின் பயன்களைக் குறிப்பிடுக.
    அ) ரொட்டிசோடா ஆ) சலவைத்தூள் இ) சுட்ட சுண்ணாம்பு
48. பாசிகளுக்கும், பூஞ்சைகளுக்கும் உள்ள வேறுபாடுகளைத் தருக.
49. மனிதக் கண்ணின் உள்ளமைப்பின் படம் வரைந்து பாகங்களை குறி.
50. பறவைகளின் எலும்புக்கூடு எவ்வாறு பறப்பதற்கு ஏற்றதாக உள்ளது.

**VII. விரிவான விடையளி:** **3×7=21**

51. வெப்பக் குடுவை வேலை செய்யும் விதத்தினை விளக்குக.

**(அல்லது)**

மனிதக்காதின் அமைப்பு மற்றும் செயல்பாட்டை விவரி.

52. கீழ்க்காணும் சமன்பாடுகளைச் சமன் செய்க.
    a) $Na + O_2 \longrightarrow Na_2O$
    b) $Ca + N_2 \longrightarrow Ca_3N_2$
    c) $N_2 + H_2 \longrightarrow NH_3$
    d) $Pb(NO_3)_2 \longrightarrow PbO + NO_2 + O_2$

**(அல்லது)**

அ) அமிலங்களின் பயன்கள் யாவை?
ஆ) காரங்களின் பயன்கள் யாவை?

53. இருவிதையிலை மற்றும் ஒரு விதையிலைத் தாவரங்களுக்கு இடையே உள்ள ஏதேனும் ஐந்து வேறுபாடுகளை எழுதுக.

**(அல்லது)**

மாதவிடாய் சூழற்சியினைப் பற்றி சுருக்கமாக விவரி.

----------

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com